முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை - 2016 சனவரி

## (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

(Financial Accounting Basics)

2016-02-06
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 12
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *விடைகள் உமக்கு வழங்கப்படும் விடைப்புத்தகத்தில் நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருந்தால், அவற்றைத் தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள் மாத்திரம் அனுமதிக்கப்படும்.*

(6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கப் பரீட்சை வினாக்கள் (OTQ's) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு வினா வினைச் சொல்லினைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினா வினைச் சொற்களின் நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பிரிவு A

### நோக்கப் பரீட்சை வினாக்கள் (OTQs)

இந்தப் பிரிவிலுள்ள 15 வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

***1.1*** *முதல்* ***1.7*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்க. உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கங்களை வினா ஒழுங்கில் (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.*

**1.1** பொருட் பெறுகைக் குறிப்பு (GRN) என்பது :

(1) கட்டளையிடப்பட்ட பொருட்களுக்கான கொடுப்பனவுகளைக் கேட்டு, வழங்குநரினால் உறுதிப் படுத்தும் ஆவணமாக பயன்படுத்தப்படுவது.

(2) நிறுவனம் பொருட்களை பெறும்போது அவற்றை பெற்றுக்கொண்டதனை பதிவு செய்வதற்கான உறுதிப்படுத்தும் ஆவணமாகப் பயன்படுத்தும் குறிப்பு.

(3) விற்கப்பட்ட பொருட்களுக்கான பணத்தினைச் செலுத்துமாறு வாடிக்கையாளர்களிடம் கோரும் ஆவணம்

(4) நிறுவனத்தின் சீரான உற்பத்தித் தொழிற்பாட்டினை மேற்கொள்வதற்கு ஏதுவாக தேவையான பொருட்களை கொள்வனவு செய்யுமாறு களஞ்சியப் பிரிவு கொள்வனவுப் பிரிவுக்கு அறிவிக்கும் உள்ளக ஆவணம். (02 புள்ளிகள்)

**1.2** கீழ்வருவனவற்றில் நிதிக் கணக்கீட்டிற்கும் முகாமைக் கணக்கீட்டிற்கும் இடையிலான வித்தியாசத் தினைச் சரியாக விபரிப்பது எது?

(1) முகாமைக் கணக்கீட்டுத் தகவல்களிலும் பார்க்க நிதிக் கணக்கீட்டுத் தகவல்கள் அதிக விபரமானதும் தகவல் நிறைந்தவையுமாகும்.

(2) முகாமைக் கணக்கீடு வரலாற்றுத் தரவுகளை கவனத்திற் கொள்வதுடன் நிதிக் கணக்கீடு வரலாற்றுத் தரவுகளையும் எதிர்காலத் தரவுகளையும் கவனத்திற் கொள்ளும்.

(3) முகாமைக் கணக்குகள் பொதுவாகவே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், நியமங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தற் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தயாரிக் கப்படுகின்ற போதிலும் நிதிக் கணக்குகள் முகாமையின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

(4) நிதிக் கணக்கீடு நிதிக் கணக்கீட்டிற்கான ஒழுங்குபடுத்தல் வேலைச் சட்டகத்தின் அடிப்படையில் நாட்டதாரரின் தகவற் தேவைகளை நிறைவுசெய்யும் பொருட்டு வியாபாரத்தின் நிதிச் செயற்பாடு மற்றும் நிதி நிலைமை ஆகியவற்றை பதிவுசெய்யும் அதே வேளை முகாமைக் கணக்கீடு வியாபாரத்தின் விளைதிறன் மற்றும் விளைவுத்திறன் பற்றி அதிக அக்கறைக்குரிய தகவல்களை அதன் முகாமைக்கு வழங்குகின்றது. (02 புள்ளிகள்)

**1.3** கீழ்வருவனவற்றில் சரியான கணக்கீட்டுச் சமன்பாடு எது?

(1) சொத்துக்கள் = மூலதனம் + இலாபம் + பரிப்புக்கள். (2) இலாபம் = வருமானம் + செலவுகள்

(3) சொத்துக்கள் = மூலதனம் - இலாபம் - பரிப்புக்கள். (4) சொத்துக்கள் = மூலதனம் = பரிப்புக்கள்.

(02 புள்ளிகள்)

**1.4** கீழ்வருவனவற்றுள் எந்த ஊடுசெயல் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் இரண்டினையும் பாதிக்கும்?

(1) நிமாலுக்கு செலுத்த வேண்டிய நீண்டகாலமாக நிலுவையிலுள்ள ரூ. 10,000/- இனை செலுத்தித் தீர்த்தல்

(2) சம்பளப் பட்டியல் உதவியாளரின் உபயோகத்திற்காக ரூ. 65,000/- காசுக்கு கணினியொன்றினை கொள்வனவு செய்தல்

(3) மோட்டார் வாகனமொன்றினை ரூ. 2.3 மில்லியனுக்கு விற்பனை செய்தல்

(4) **ABC வங்கி** வழங்கிய தனிச்சங்களில் ரூ. 100,000/- இனை முதலீடு செய்தல் (02 புள்ளிகள்)

**1.5** நிதியறிக்கையிடலுக்கான கோட்பாட்டு வேலைச் சட்டகத்திற்கு அமைய நிதிக் கூற்றுக்களின் ஆக்கக் கூறுகள் உள்ளடக்குவது,

(1) முற்றடக்க வருமானக் கூற்று, நிதிநிலைக் கூற்று, காசுப்பாய்வுக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று, நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

(2) சொத்துக்கள், பரிப்புக்கள், உரிமையாண்மை, வருமானம், செலவுகள்

(3) உற்பத்திக் கணக்கு, வியாபாரக் கணக்கு, இலாப நட்டக் கணக்கு, நிதிநிலைக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று

(4) நடைமுறையல்லாச் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள், நடைமுறையல்லாப் பரிப்புக்கள், நடைமுறைப் பரிப்புக்கள், உரிமையாண்மை

(02 புள்ளிகள்)

**1.6** கணக்கியற் தரவுத் தளமொன்று எந்த வகையான பிரதான கோப்புக்களை (files) கொண்டிருக்கும்?

(1) நிரந்தரக் கோப்பு, நடைமுறைக் கோப்பு, ஆளணிக் கோப்பு

(2) மூலத் தகவற் கோப்பு (Master file), ஊடுசெயற் கோப்புகள், வேலைக் கோப்புகள் (Working file)

(3) பொதுப் பேரேட்டு மூலத் தகவற் கோப்பு, பெயரளவுக் கணக்குக் கோப்பு, தனிநபர் கணக்குக் கோப்பு

(4) தொக்கு மூலத் தகவற் கோப்பு, கடன்பட்டோர் மூலத் தகவற் கோப்பு, கடன் கொடுத்தோர் மூலத் தகவற் கோப்பு, சம்பளப் பட்டியல் மூலத் தகவற் கோப்பு. (02 புள்ளிகள்)

**1.7** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் எது நிதியறிக்கையிடல் கோட்பாட்டு வேலைச் சட்டகத்திற்கு அமைய "பரிப்பு (liability)" எனும் பதத்தினை சரியாக விளக்குகின்றது?

(1) கடந்தகால நிகழ்வினால் ஏற்படும் நிறுவனத்தின் தற்போதைய கடப்பாடு ஆவதுடன் அதன் தீர்ப்பனவு நிறுவனத்தின் வளங்களின் வெளிப்பாய்வினை விளைவிக்கும் என எதிர்பார்க்கப் படுவது

(2) கடந்தகால நிகழ்வுகளினால் நிறுவனத்தின் காசு வெளிப்பாய்வுக்கான சாத்தியத்தினை விளை விப்பது

(3) கடந்தகால நிகழ்வுகளினால் ஏற்படும் நிறுவனத்தின் எதிர்காலக் கடப்பாடு ஆவதுடன் அதன் தீர்ப்பனவு நிறுவனத்தின் வளங்களின் வெளிப்பாய்வினை விளைவிக்குமென எதிர்பார்க்கப் படுவது

(4) கடந்தகால நிகழ்வினால் ஏற்படுவதும், அதன் தீர்ப்பனவு நிறுவனத்தின் வளங்களின் வெளிப்பாய்வினால் விளைவிக்கப்படுவதுமான நிறுவனத்தின் சாத்தியமான கடப்பாடாகும்.
(02 புள்ளிகள்)

***1.8** முதல் **1.15** வரையான வினாக்களுக்கு சரியான விடையினை உமது விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தை எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.*

**1.8** கணக்கீட்டுச் சமன்பாட்டில் கீழ்வரும் ஊடுசெயல்களின் தாக்கங்களை (அதிகரிப்பு / வீழ்ச்சி) கூறுக:

| **ஊடுசெயல்** | **சொத்துக்கள் = உரிமையாண்மை + பரிப்புக்கள்** |
|---|---|
| (a) கடனுக்கு தொக்குக் கொள்வனவு | |
| (b) கடனுக்கு பொருட்கள் விற்பனை (இலாபத்தில்) | |

(02 புள்ளிகள்)

**1.9** கீழ்வரும் ஊடுசெயல்கள் ஒவ்வொன்றிற்கும் இரட்டைப் பதிவுகளைக் கூறுக.

(a) கடன் அடிப்படையில் ரூ.3.5 மில்லியனுக்கு மோட்டார் வாகனமொன்றினை கொள்வனவு செய்தல்

(b) ரூ. 10,000/- க்கான கடன் விற்பனையில் கழிவாக ரூ. 2,000/- இனைக் கழித்த பின்னர் உரிய தொகையை வாடிக்கையாளரிடமிருந்து பணமாகப் பெறுதல்

(c) வியாபாரத்தில் உரிமையாளரால் மூலதனமாக ரூ. 100,000/- செலுத்தப்படுதல் (06 புள்ளிகள்)

**1.10** பேரேட்டுக் கணக்குகளை மரபுரீதியான வகைப்படுத்தல்களின் அடிப்படையில் வகைப்படுத்தி, ஒவ்வொரு வகைக்கும் ஒரு உதாரணம் வீதம் **எழுதுக.** (03 புள்ளிகள்)

**1.11** விசுவாசமாக முன்னிலைப்படுத்தப்படும் தகவல்கள் சில குணாம்சங்களைக் கொண்டிருக்கும். அத்தகைய தகவல்களின் குணாம்சங்கள் மூன்றினை (03) நிரற்படுத்துக. (03 புள்ளிகள்)

**1.12** "சொத்து (Asset)" எனும் பதத்தினை **பொருள் வரையறை செய்க.** (03 புள்ளிகள்)

**1.13** கணக்கீட்டு முறைமையை கணினிமயப்படுத்துவதனால் நிறுவனம் முகங்கொடுக்க வேண்டிய பிரதிகூலங்கள் மூன்றினை (03) **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

**1.14** 2015 சனவரி 01 ஆந் திகதி **சமனின்** வியாபாரம் ஆரம்ப நிகரச் சொத்தாக ரூ. 175,000/- இனையும் 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி இறுதி நிகரச் சொத்தாக ரூ.350,000/- இனையும் கொண்டிருந்தது. அந்தக் காலத்தின்போது வியாபாரம் ரூ.75,000/- இனை இலாபமாக பெற்றிருந்ததுடன், சமன் தமது தனிப்பட்ட தேவைக்காக ரூ. 50,000/- இனை எடுத்திருந்தார்.

2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டில் **சமன்** வியாபாரத்தில் உள்ளிட்ட மேலதிக மூலதனத்தினைக் **கணிக்குக.**

(03 புள்ளிகள்)

**1.15** *கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் கூறுக. உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தினை எழுதி அவற்றிற்கு எதிரே உமது விடையை எழுதுக.*

(a) முன்னர் பட்டியலிடப்பட்ட விற்பனை தொடர்பில் வாங்குனர் விற்பனையாளருக்கு செலுத்த வேண்டிய தொகையை குறைப்பதற்காக பொருட்கள், சேவைகளின் விற்பனையாளர் வாங்குனருக்கு ஒரு செலவுப்பதிவுக் குறிப்பினை (Credit Note) வழங்குவார். (01 புள்ளி)

(b) வழங்குநர்களிடமிருந்து பொருட்களைக் கட்டளையிடுவதற்கு கொள்வனவுப் பிரிவினரால் பயன்படுத்தப்படும் ஆவணம் பொருட்கள் கோரிக்கைக் குறிப்பு (MRN) ஆகும். (01 புள்ளி)

(c) கணக்கீட்டுக் கண்ணோட்டத்தில் சம்பளப் பட்டியல் (payroll) ஒரு குறிப்பிட்ட காலத்தில் வழங்கப்பட்ட சேவைகளுக்காக ஊழியர்களுக்கு செலுத்திய தொகையை குறிக்கின்றது. (01 புள்ளி)

*பிரிவு A யின் முடிவு*

## <u>பிரிவு B</u>

இந்தப் பிரிவிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 40 புள்ளிகள்)

**வினா 02**

(a) அண்மையில் கட்டிடக் கலைஞராக தகைமை பெற்ற **கலும்** தமது சொந்த வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கு எண்ணுகிறார். அவருக்குக் கணக்கியற் பின்னணி எதுவும் இல்லை. எனவே அவர் ''தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாடு'' மற்றும் ''அட்டுறு கோட்பாடு'' ஆகியவற்றை விளங்கிக் கொள்ள உமது உதவியினை நாடுகின்றார்.

**நீர் செய்ய வேண்டியது :**

மேற்படி கோட்பாடுகள் ஒவ்வொன்றினதும் கருத்தினை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) 2016 சனவரி மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் **சாந்தி டிரேடர்ஸின்** சிற்றுக் காசு ஊடுசெயல்கள் கீழே தரப்பட்டுள்ளன. **சாந்தி டிரேடர்ஸ்** ரூ. 5,000/- இனை சிற்றுக்காசு மிதப்பாகப் பேணுகிறது.

| சனவரி | விபரம் |
|---|---|
| 01 | சிற்றுக் காசு மீள் நிரப்பு தொகை ரூ.3,500/- பிரதான காசாளரிடமிருந்து பெறப்பட்டது. |
| 02 | புத்தாண்டுக் கொண்டாட்டச் செலவுகள் - உறுதிச்சீட்டு இல. 1 - ரூ. 1,400/-. |
| 03 | காகிதாதிகள் கொள்வனவு – உறுதிச்சீட்டு இல. 2- ரூ. 560/-. |
| 06 | முத்திரை, தபால் உறைகளுக்கான கொடுப்பனவு – உறுதிச்சீட்டு இல. 3 - ரூ.250/-. |
| 07 | அறக்கொடைக்கு நன்கொடை – உறுதிச்சீட்டு 4 - ரூ.150/-. |
| 09 | சோமதாசவிற்கு துப்பரவாக்கக் கொடுப்பனவு – உறுதிச்சீட்டு இல. 5 - ரூ. 600/-. |
| 11 | பஸ் வண்டிக் கட்டண கொடுப்பனவு – உறுதிச்சீட்டு இல.6 - ரூ.50/-. |

2016 சனவரி 15 ஆந் திகதி சிற்றுக்காசு மீள்நிரப்பற் தொகை பிரதான காசாளரினால் மீளச் செலுத்தப்பட்டது.

**நீர் செய்ய வேண்டியது ,**

மேற்படி ஊடுசெயல்களை **சாந்தி டிரேடர்ஸின்** சிற்றுக் காசேட்டில் **பதிவு செய்க.**

***<u>குறிப்பு:</u>*** *சிற்றுக் காசேட்டுச் செலவுகளை காகிதாதிகள் செலவு, பிரயாணச் செலவு, தபாற் செலவு, துப்புரவாக்கச் செலவு மற்றும் ஏனைய செலவுகளாக* ***வகைப்படுத்துக.***

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

2014 சனவரி 01 ஆந் திகதி **மகேஷ்** காகிதாதிகளை விற்பனை செய்யும் தனியுரிமையாளர் வியாபாரத்தினை ஆரம்பித்தார்.

2014 டிசெம்பர் 31 ஆந் திகதியில் அவரின் வியாபாரத்தின் ஐந்தொகை உருப்படிகள் சில கீழே தரப்பட்டுள்ளன :

**2014 டிசெம்பர் 31 இல்**
**நிதி நிலைக் கூற்று**

| | (ரூ.) |
|---|---:|
| **நிலையான சொத்துக்கள் :** | |
| விநியோக வேன் | 500,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | |
| வியாபார வருமதிகள் | 800,000 |
| காசுக் கையிருப்பு | 750,000 |
| | **2,050,000** |
| **மூலதனக் கணக்கு மீதி** | 1,475,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | |
| வியாபார சென்மதிகள் | 575,000 |
| | **2,050,000** |

2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வியாபாரக் காசேட்டின் தொகுப்பு கீழ்வருமாறு :

**2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசேட்டுத் தொகுப்பு**

| | | | |
|---|---:|---|---:|
| முன்கொணரப்பட்ட மீதி | 750,000 | எடுப்பனவுகள் | 250,000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெறுவனவுகள் | 1,250,000 | கடன்கொடுத்தோருக்கு கொடுப்பனவுகள் | 865,000 |
| | | வாடகை | 137,500 |
| | | எரிபொருட் செலவுகள் | 12,000 |
| | | மின் கட்டணம் | 27,000 |
| | | சம்பளங்கள் | 240,000 |
| | | கீழ்க் கொண்டுசென்ற மீதி | 468,500 |
| | **2,000,000** | | **2,000,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) **மகேஷ்** விநியோக வானை 2014 டிசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்ததுடன் அதன் தேய்மான வீதம் 10% ஆகும்.

(2) காகிதாதிகள் விற்பனைக் கடை **மகேஷின்** நண்பரொருவருக்குச் சொந்தமான கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்கு இணங்கப்பட்ட மாதாந்த வாடகை ரூ. 12,500/-.

(3) **மகேஷ்** சகல கொடுக்கல் வாங்கல்களையும் கடனடிப்படையில் மேற்கொள்வதுடன் அவர் கொள்வனவு செய்த சகல பொருட்களையும் ஆண்டின் இறுதியில் விற்பனை செய்திருந்தார். எனவே ஆண்டின் இறுதியில் தொக்குகள் எஞ்சியிருக்கவில்லை.

(4) **மகேஷ்** 2015 டிசெம்பர் மாதத்திற்கான மின்சாரச் செலவு ரூ. 2,200/- இனை 2016 சனவரி மாதத்தில் செலுத்தியிருந்தார்.

(5) 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி **மகேஷின்** வியாபாரக் கணக்கேடுகளில் கீழ்வரும் மீதிகள் காணப்பட்டன:

வியாபார வருமதிகள் : ரூ. 600,000/-

வியாபார சென்மதிகள் : ரூ. 660,000/-

**நீர் செய்ய வேண்டியது :**

2015 டிசெம்பர் 31 ஆந் திகதியில் மகேஷின் வியாபாரத்தின் பரீட்சை மீதியினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

2015 மார்ச் 31 ஆந் திகதி **எவர் டிரேடிங் கம்பனியின்** பரீட்சை மீதி இணங்கவில்லை. ஏற்பட்ட வித்தியாசமான ரூ. 505,500/- தொங்கற் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து தயாரிக்கப்பட்ட இறுதிக் கணக்குகள் அந்தக் காலத்திற்கான நிகர இலாபமாக ரூ. 12,657,300/- இனை காட்டியது. பின்னர் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து கீழ்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன :

(1) மோட்டார் வாகனத் திருத்தச் செலவு ரூ. 51,000/- கம்பனியால் மூலதனப்படுத்தப்பட்டு இருந்தது.

(2) வாடிக்கையாளர் ஒருவரினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட வங்கி வைப்பு ரூ. 123,000/- வட்டி வருமானமாகக் கொள்ளப்பட்டிருந்தது.

(3) விற்பனை நாளேடு ரூ. 525,000/- இனால் குறைவாக கூட்டப்பட்டிருந்தது.

(4) வாடிக்கையாளர் ஒருவருக்கு அனுமதிக்கப்பட்ட கழிவு ரூ. 64,000/- வியாபார வருமதியாளர் கணக்கில் சரியாக பதிவுசெய்யப்பட்ட போதிலும் பெறப்பட்ட கழிவுக் கணக்கில் ரூ. 46,000/- ஆக வரவுப் பதிவு செய்யப்பட்டது.

(5) பல்லினக் கணக்கு மீதியான ரூ. 1,125,000/- பரீட்சை மீதியில் ரூ. 112,500/- ஆக எடுக்கப்பட்டிருந்தது.

**நீர் செய்ய வேண்டியது :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கு தேவையான நாட்குறிப்புப் பதிவுகள் (05 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு (02 புள்ளிகள்)

(c) திருத்தப்பட்ட நிகர இலாபத்தினைக் காட்டும் கூற்று (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

மொரட்டுவையில் அமைந்துள்ள தனி உரிமையாளர் நிறுவனமான **சேப்டி பர்ஸ்ட் டிரேடர்ஸ்** வியாபாரம் தொடர்புபட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. இது பிரதானமாக நிர்மாணத் தொழிற்துறைக்கு பாதுகாப்புக் கவச அங்கிகளை உற்பத்தி செய்கின்றது.

(1) 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி கொண்டிருந்த தொக்குகளின் விபரம் :

| **தொக்கின் வகை** | **ரூ.** |
|---|---|
| மூலப்பொருட்கள் - நார் இழை | 2,715,000 |
| - உதிரிப்பாகங்கள் | 1,252,000 |
| ஆரம்ப புத்துருவாகும் வேலைகள் | 325,000 |
| முற்றுப்பெற்ற பொருட்கள் (1,200 கவச அங்கிகள் தொழிற்சாலைக் கிரயத்தில்) | 1,260,000 |

(2) 2015 யூன் 30 ஆந் திகதி முடிவடைந்த முதற் காலாண்டிற்கான மூலப்பொருட் கொள்வனவுகள் :

| **மூலப்பொருள்** | **ரூ.** |
|---|---|
| நார் இழை | 3,549,000 |
| உதிரிப்பாகங்கள் | 2,125,000 |

(3) முதலாவது காலாண்டிற்கான நேரில் உற்பத்தி ஊழியர்களின் சம்பளம் :

| **ஊழியர் வகை** | **ரூ.** |
|---|---|
| உற்பத்தி நிறைவேற்று அலுவலர்கள் | 225,000 |
| உற்பத்தி நிறைவேற்றுநர் அல்லாத அலுவலர்கள் | 325,000 |
| | **550,000** |

(4) நேர் கூலிகள் உற்பத்தி செய்யப்பட்ட பாதுகாப்பு அங்கிகளின் அடிப்படையில் செலுத்தப்படு வதுடன் விபரங்கள் கீழ்வருமாறு :

| **ஊழியர் வகை** | **உற்பத்தி செய்யப்பட்ட பாதுகாப்பு அங்கி ஒன்றிற்கான கொடுப்பனவு (ரூ.)** |
|---|---|
| எந்திர இயக்குநர்கள் | 125 |
| உதவியாளர்கள் | 25 |
| பொதியிடல் ஊழியர் | 25 |

(5) முதலாவது காலாண்டில் இறுக்கப்பட்ட ஏனைய நேரடிச் செலவுகள் – ரூ. 1,025,000/-.

(6) முதலாவது காலாண்டில் சேப்டி பர்ஸ்ட் டிரேடர்ஸ் மொத்தமாக 12,500 கவச அங்கிகளை உற்பத்தி செய்தது.

(7) மூலதனச் சொத்துக்கள் மீதான வருடாந்த தேய்மான அறவீடு கீழ்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| எந்திரம் | 2,400,000 |
| தொழிற்சாலைக் கட்டிடம் | 3,000,000 |

கட்டிடத்தின் தரைப் பரப்பின் ¼ பங்கு களஞ்சியசாலையாக பயன்படுகின்றது.

(8) முதலாவது காலாண்டில் உற்பத்திசார்ந்த ஏனைய செலவுகள் – ரூ.1,350,000/-.

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

- 2015 யூன் 30 ஆந் திகதியில் இறுதித் தொக்குகள் :

| | ரூ. |
|---|---|
| மூலப்பொருட்கள் - நார் இழை | 1,025,000 |
| மூலப்பொருட்கள் - உதிரிப்பாகங்கள் | 875,000 |
| இறுதிப் புத்துருவாகும் வேலைகள் (75% பூர்த்தியடைந்தவை) | 790,000 |

- **சேப்டி பர்ஸ்ட் டிரேடர்ஸ்** அதன் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு கவச அங்கிகளை அதன் சொந்த விற்பனைப் பிரிவுக்கு கிரயத்தில் 20% இலாப எல்லை வைத்து மாற்றுகின்றது.

**நீர் செய்ய வேண்டியது :**

2015 யூன் 30 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டிற்கு **சேப்டி பர்ஸ்ட் டிரேடர்ஸின்** உற்பத்திக் கணக்கினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

*பிரிவு B யின் முடிவு*

# <u>பகுதி C</u>

இந்தப் பிரிவிலுள்ள ஒரே (01) வினாவுக்கு விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**நிமாலுக்குச்** சொந்தமான தனியுரிமையாளர் வியாபாரமான **ஸ்ரார் பாத் என்ரபிரைசின்** 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியிலான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

**2015 டிசெம்பர் 31 ஆந் திகதி பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் : | | |
| காணியும் கட்டடமும் (காணிப் பெறுமதி ரூ. 3,000,000/-) | 10,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 5,500 | |
| தளபாட, இணைப்புகள் | 3,500 | |
| திரள் தேய்மானம் - 2015 சனவரி 01 இல்: | | |
| கட்டடம் | | 1,200 |
| மோட்டார் வாகனங்கள் | | 1,500 |
| தளபாட, இணைப்புகள் | | 750 |
| 2015 சனவரி 01 இல் தொக்குகள் | 650 | |
| 2015 சனவரி 01 இல் ஐயுறவுக் கடன் ஏற்பாடு | | 32 |
| 2015 சனவரி 01 இல் மூலதனக் கணக்கு | | 13,900 |
| எடுப்பனவுகள் | 150 | |
| விற்பனைத் திரும்பல் | 150 | |
| கொள்வனவுத் திரும்பல் | | 80 |
| வியாபாரக் கடன்பட்டோர் / வியாபாரக் கடன்கொடுத்தோர் | 3,700 | 2,183 |
| காசுக் கையிருப்பு | 2,500 | |
| வங்கி மேலதிகப் பற்று | | 110 |
| ஆலோசனைக் கட்டணம் – வியாபார அபிவிருத்தி அலுவலர் | 210 | |
| வங்கிக் கடன் | | 3,100 |
| பாதிப்படைந்த தொக்குகள் | 185 | |
| சம்பளமும் கூலிகளும் | 1,410 | |
| விற்பனைப் பணிசை | 535 | |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 22,000 | 30,000 |
| இறக்குமதித் தீர்வை | 325 | |
| வெளிவண்டிக் கூலி | 180 | |
| மின் மற்றும் நீர்க் கட்டணங்கள் | 433 | |
| செலுத்திய சோலைவரி | 300 | |
| விளம்பரச் செலவுகள் | 1,050 | |
| அனுமதித்த கழிவுகள் | 77 | |
| | **52,855** | **52,855** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2015 டிசெம்பர் 31 இல் இறுதித் தொக்குகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டன :

| | | |
|---|---|---|
| கிரயம் | - | ரூ. 1,120,000/- |
| நிகர தேறுகைப் பெறுமதி (NRV) | - | ரூ. 1,450,000/- |

(2) **நிமால்** ரூ. 175,000/- பெறுமதியான தமக்குச் சொந்தமான முச்சக்கர வண்டியை 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி **ஸ்ரார் பாத் என்ரபிரைசிக்கு** மாற்றினார். இது கணக்கேடுகளின் இன்னும் பதிவு செய்யப்படவில்லை.

(3) வியாபாரத்தில் பயன்படுத்துவதற்காக 2015 ஜுலை 01 ஆந் திகதி நிமால் மோட்டார் வாகன மொன்றினை ரூ. 1,200,000/- க்கு கொள்வனவு செய்தார்.

(4) வியாபாரத்தின் தேய்மானக் கொள்கையானது சொத்துக்களை நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தின் மீது கீழ்வரும் விகிதங்களில் தேய்மானம் செய்வதாகும் :

| | | |
|---|---|---|
| கட்டடம் | - | 10% |
| மோட்டார் வாகனங்கள் | - | 20% |
| தளபாட, இணைப்புகள் | - | 25% |

(5) ரூ. 55,000/- இனை செலுத்த வேண்டியிருந்த **கமால்** எனும் கடன்பட்டோன் ஒருவர் அந்தத் தொகையை செலுத்த முடியாது உள்ளதாக ஆண்டின்போது அறிவித்திருந்தார். அந்தத் தொகையை பதிவழிப்புச் செய்வதற்கு நிமால் தீர்மானித்தார்.

(6) கம்பனியின் கொள்கை நிலுவையிலுள்ள வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் 5% இனை ஐயுறவுக் கடன் ஏற்பாடாக செம்மையாக்கம் செய்வதாகும்.

(7) **நிமால்** தமது வியாபாரத்தினை விரிவுபடுத்துவதற்காக வியாபார அபிவிருத்தி அலுவலர் ஒருவரை ஆலோசகராக ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தியிருந்தார். இந்த ஒப்பந்தம் 2015 மே 01 ஆந் திகதி ஆரம்பமானதுடன் மாதாந்த ஆலோசனைக் கட்டணம் ரூ. 30,000/-.

(8) 2015 டிசெம்பர் 28 ஆந் திகதி நீர்க் கட்டணம் செலுத்தப்பட்டபோது ரூ.10,000/- இனால் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

**கீழ்வருவனவற்றைத் தயாரிக்குக :**

(a) 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று.

(b) 2015 டிசெம்பர் 31 ஆந் திக தியில் நிதி நிலைக் கூற்று. (20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க** (Define) | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக** (Draw) | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க** (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக** (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக** (Relate) | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக** (State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக** (Calculate / Compute) | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க** (Discuss) | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக** (Explain) | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக** (Interpret) | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல்** (Recognize) | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க** (Record) | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக** (Summarize) | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக** (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக** (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக** (Demonstrate) | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக** (Graph) | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக** (Prepare) | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக** (Prioritize) | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க** (Reconcile) | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக** (Solve) | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க** (Analyze) | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக** (Compare) | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக** (Contrast) | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக** (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக** (Outline) | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |